பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை (06-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 10

# தூத்துக்குடியிலிருந்து வள்ளங்கள் கொழும்புத் துறைமுகம் வரத் தடை!

## புலிகள் ஊடுருவலாம் என அச்சம்

கொழும்பு, டிசம்பர் 6

தமிழ்நாட்டின் தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து வள்ளங்கள் (வத்தைகள்) மற்றும் படகுகள் கொழும்புத் துறைமுகம் வருவதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின் பேரில் கப்பற்றுறை புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரப் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தார். இந்தத் தடை உத்தரவு கடந்த புதன்கிழமை தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளது.

கடந்த புதன்கிழமை மூன்று வள்ளங்கள் தூத்துக்குடியில் இருந்து பொருள்களுடன் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்தபோது, துறைமுகத்துக்குள் நுழைய அவை அனுமதிக்கப்படவில்லை.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து 120 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள காலித் துறைமுகம் செல்லுமாறு பிரஸ்தாப வத்தைகளின் மாலுமிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதை இறுதி நேரத்தில் தவிர்த்தார் பீரிஸ்

### கொலை முயற்சி குறித்து எச்சரிக்கை

தற்கொலைத் தாக்குதல் நடைபெறலாம் என எச்சரிக்கப்பட்டதால் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதை இறுதி நேரத்தில் தவிர்த்துக் கொண்டார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் வர்த்தகப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று நடைபெற இருந்தது.

இந்தக் கூட்டத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்தும் வர்த்தகப் பிரதிநிதி ஒருவர் சென்றிருந்தார் என்றும் —

வர்த்தகப் பிரதிநிதி என்ற போர்வையில் தற்கொலைப் படையாளி ஒருவர் வந்திருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்த வர்த்தகப் பிரதிநிதி கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அமைச்சர் பீரிஸின் விஜயமும் ரத்துச் செய்யப்பட்டது.

(இ-3-5-10)

## தம்முடன் சேர்ந்து போரிட விரும்பும் குழுக்களுக்கு புலிகள் நிபந்தனை!

கொழும்பு, டிச. 6

விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராட விரும்பும் தமிழ்க்குழுக்களுக்கு விடுதலைப் புலிகள் மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்தியாவில் இருந்து கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய ஈ. என். டி. எல். எவ். அமைப்பு பிரதிநிதிகளிடமே விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் இந்த நிபந்தனைகளை விதித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

★ தாயகக் கோட்பாட்டுக்கு அப்பால் எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது.

★ புலிகளுடன் இராணுவ ரீதியில் இணைந்து போராட வேண்டுமானால், தமிழ் தேசிய இராணுவமாக செயற்படும் விடுதலைப் புலிகளின் உப — பிரிவுகளாக ஏனைய தமிழ்க் குழுக்கள் இணையலாம்.

★ அரசியல் ரீதியான நடவடிக்கையானாலும் அது விடுதலைப் புலிகளின் கீழ் இருந்தே செயற்படவேண்டும்.

மேற்கண்ட மூன்று நிபந்தனைகளையே விடுதலைப் புலிகள் விதித்துள்ளனர் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபநதனைகளை ஈ. என். டி. எல். எவ். அமைப்பு ஏற்று நடக்க சம்மதிப்பதாகத் தெரிவித்ததால் இருதரப்புக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டது என்றும்—

ஆனால் அந்த அமைப்பின் பிரமுகர்கள் தமிழகம் திரும்பியதும் அந்த அமைப்புக்கு அங்குஎதிர்ப்புக்கிளம்பியதாகவும் —

உடன் அந்த அமைப்பு விடுதலைப் புலிகளுக்கு எதிராக அறிக்கை விடவேண்டிய நிலைக்கு உள்ளானது என்றும் — அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-150)

## மணலாறில் மோதல்

கொழும்பு, டிச. 6

மணலாறு பிரதேசத்தில் உள்ள கொக்குத்தொடுவாயில் நேற்று முன்தினம் மாலை படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலின் பின்னர் படையினர் தேடுதல் நடத்தியபோது, 7 புலிப்படையினரின் சடலங்களையும் ஆயுதங்களையும் கண்டெடுத்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

(இ-5)

## சூறாவளி வலுவிழந்தது

புதுடில்லி, டிச. 6

ஆந்திர மாநிலத்தைத் தாக்கலாம் என எதிர்பார்த்த சூறாவளி வலுவிழந்து வருவதாக இந்திய வானிலை நிபுணர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

இந்தச் சூறாவளி மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்தில்

(8 ஆம் பக்கம் பார்க்க

## முச்சந்தி முரளி



அப்ப குஜ்ரால் இனி என்ன சாட்டுச் சொல்லுவாரோ?

## பயணிகள் கப்பல்கள்

திருகோணமலை, டிச. 6

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் கப்பல்கள் நேற்று மாலை வடக்கு நோக்கிப் புறப்படத் தயாரானதாக திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

காங்கேசன்துறையில் இருந்து பயணிகள் கப்பல் இன்று திருகோணமலை நோக்கிப் புறப்படவிருப்பதால், சிவில் அலுவலகத்தில் பெயர் பதிந்தவர்களில் பட்டியல் இல. 131 க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-150)

## குஜ்ராலுடன் டக்ளஸ் 45 நிமிடம் சந்திப்பு

கொழும்பு, டிச. 6

இந்தியா சென்றிருந்த ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ராலுடன் 45 நிமிட நேரம் பேச்சுகள் நடத்தினார்.

இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து டக்ளஸ் தேவானந்தா குஜ்ராலிடம் விளக்கிக் கூறினார்.

இதற்குப் பதில் அளித்த குஜ்ரால், இலங்கையில் தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்து தாம் அனுதாபப்படுவதாகத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு பேச்சு மூலம் அரசியல் தீர்வு காண்பதே தமது விருப்பம் என்றும் அவர் கூறினார் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

(இ-3-150)

## தேர்தல் அதிகாரிகள் அடுத்த வாரம் வருகை

யாழ். மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ள கொழும்பில் இருந்து தேர்தல் திணைக்கள அதிகாரிகள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

95ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் படி இந்தத் தேர்தல் நடைபெறும் என்றும் —

கொழும்பில் உள்ள மூன்று தமிழ்க் கட்சிகள் நியமனப் பத்திரங்கள் தொடர்பான ஆவணங்களைப் பெற்றுள்ளன என்றும் — தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3-150)

## மீளக் குடியேறியோருக்கான ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

### யாழ். செயலகப் பிரிவிலும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 6

மீளக்குடியேறிய குடும்பங்களுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் பணி யாழ். பிரதேச செயலகப் பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இடம் பெயர்ந்து மீள யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் விவாகம் செய்தவர்கள், தவிர்ந்த ஏனைய சகலருக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்படும்.

தற்சமயம் மீளக்குடியேற முடியாத பகுதிகளைச் சேர்ந்தவர்கள் நிரந்தரமாக யாழ். பிரதேச செயலகப் பகுதியில் குடியேற விரும்பினால், அவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

அத்தகையோர் பிரதேச செயலகத்தில் தமது பதிவை மேற்கொள்வதன் மூலம் இக் கொடுப்பனவைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவுநர் திருவுருவப்பட திரைநீக்கம்

சாவகச்சேரி, டிச. 6 கொடிகாமம் வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் நிறுவுநரான அமரர் வீரசிங்கத்தின் திருவுருவப்படம் இன்று காலை திரைநீக்கம் செய்யப்படும்.

பாடசாலை அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் இ. சிவானந்தன் திருஉருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைப்பார்.

இதன் பின்னர் பரிசளிப்பு விழா இடம்பெறும்.

(அ-31)


## விசேட அடையாள அட்டை படம் எடுத்தல்

பாடசாலைப் பிள்ளைகளின் நலன் கருதி விசேட அடையாள அட்டை உடன் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக பாடசாலைகளில் எம்மால் படம் எடுக்கப்படுகின்றன.

★ கறுப்பு–வெள்ளைப் படங்களே (அமைச்சினால்) சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

ரூபா **35**/- மட்டும்

★ விசேட அடையாள அட்டைக்கான புகைப் படம் எடுக்க விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

★ வெளிநாட்டுக்கான கலர் பாஸ்போர்ட் படங்களும், அந்தியேட்டிகளுக்கான பெரிய படங்களும் செய்து கொடுக்கப்படும்.

கவனிக்குக :- எடுக்காத மாணவர்களோ, மக்களோ மேற்படி படம் எடுத்த 1 மணித்தியாலத்தில் எங்கள் ஸ்தாபனத்தில் விசேட கவனம் எடுத்து வழங்கப்படுகின்றன.

ஆள்பதிவுத் திணைக்களத்தால் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**அஜந்தாஸ் ஸ்ருடியோ**

**வதிரி, நெல்லியடி.**

(சி/3687)


## கண்ணீர்ப் பூக்கள்

எமது கலைப்பீட சகமாணவன் சுதேஸ்குமாரின் அருமைச் சகோதரன்

**ந. சதீஸ்குமார்** அவர்களின்

திடீர் மறைவையொட்டி அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைப்பீட 1 ஆம் வருட
மாணவர்கள் (95/96)
(யாழ். பல்கலைக்கழகம்)

(43984)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 07 — 11 — 1940



மறைவு: 06 — 11 — 1996

### அமரர் வேலுப்பிள்ளை திரவியம் (ஜோர்ஜ்)

''உயிர்ப்பும் உயிரும் நானே'' — இயேசு.

''கருணை நிறைந்த இறைவா! இவரின் ஆன்மாவை ஏற்றுக்கொண்டு; உமது வான் வீட்டின் நித்திய ஒளியை இவர் மேல் பிரகாசித்தருளும்''

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (06-12-96) வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதில் கலந்துகொண்டு இவரின்ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்ந்து இவர் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(43982)

## சொற்பொழிவு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளி தோறும் நடைபெறும் சமய நிகழ்ச்சிகள் வரிசையில் —

இன்று மு. ப. 10 மணிக்கு 'கண்டறியாதன கண்டேன்' என்னும் பொருளில் ஞான பண்டித இயலரசு க. முத்துவேலு சமயச் சொற்பொழிவாற்றுவார். (அ)

## கேள்விப் பத்திரம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு

**பிரேதங்கள் எடுத்து வழங்குதற்கும் கழிவு உறுப்புக்களை அழிப்பதற்கும்**

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு கீழ் வரும் இடங்களில் இருந்து பிரேதங்கள் எடுத்து வந்து வழங்குவதற்கும், கழிவு உறுப்புக்களை அகற்றுவதற்கும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு இடங்களில் இருந்து பிரேதம் எடுத்து வருவதற்கும், கழிவு உறுப்புக்களை அகற்றுவதற்குமாக கூலிகள் தனித்தனியே தெளிவாக எழுதப்பட வேண்டும்.

1. யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பிரேதம் ஒன்றை எடுத்து வருவதற்கான கூலி.
2. மானிப்பாய் வைத்தியசாலையிலிருந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பிரேதம் ஒன்றை எடுத்து வருவதற்கான கூலி.
3. கைதடி வயோதிப இல்லத்திலிருந்து யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பிரேதம் ஒன்றை எடுத்து வருவதற்கான கூலி.
4. யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து கழிவு உறுப்புகளை எடுத்துச் சென்று அழிப்பதற்கான பொதி ஒன்றிற்கான கூலி.

குறிப்பு:–

கழிவு உறுப்புக்கள் யாழ்ப்பாண மாநகரசபையினாலும் மற்றும் நாட்டின் பொதுச் சட்டத்திற்கு அமைவாகவும் அவற்றிற்கென குறித்து ஒதுக்கப்பட்ட இடத்தில் சுகாதாரத்திற்கு பங்கம் இன்றி அழிக்கப்படல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ''நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக வேனும் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரேதங்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி:– **16 - 12 - 96**

பதிவாளர்

(அ-3673)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சபாபதி செல்லம்மா

கோண்டாவில் (மிசன் பாடசாலை) வீதியைச் சேர்ந்த திருமதி சபாபதி செல்லம்மா 04-12-96 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும், சின்னையாவின் அன்புத் தாயாரும், தங்கரத்தினத்தின் நேசமுள்ள மாமியாரும், மோகனதாஸ் (பிரான்ஸ்), ரமேஸ்வரன் (பிரான்ஸ்), அகிலா, குலநந்தினி ஆகியோரின் ஆருயிர்ப் பேர்த்தியும், அழகம்மா, நல்லம்மா (மலேசியா) காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற சின்னம்மா, கந்தசாமி, தங்கரத்தினம் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து தகனக் கிரியைகளுக்காக இன்று (06-12-96) வெள்ளிக்கிழமை மு.ப 11-30 மணிக்கு (பழைய நேரம்) காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
வெ. ச. சின்னையா
(மகன்)

''அகிலாபுரி''
மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

(43966)

## திருமதி செந்தில்நாயகி சுந்தரமூர்த்தி

(சத்திரந்தை, காரைநகர்)

காரைநகர் சத்திரந்தை களபூமியைச் சேர்ந்தவரான திருமதி செந்தில்நாயகி சுந்தரமூர்த்தி 5-12-96 இல் கம்பளையில் காலமானார்.

இவர் கம்பளை பிரபல வர்த்தகர் சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருளம்பலம் — திருமதி அருளம்பலம் ஆகியோரின் அன்பு மகளும், அருணகிரிநாதன், தேவகுஞ்சரி, இராஜகுமாரி, சாந்தகுமாரி, கமலக்கண்ணன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சொர்ணலாதேவி, பரஞ்சோதி, சிவராஜா, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கம்பளையில் உள்ள அவரது இல்லத்தில் 6-12-96 இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தே. பாலசிங்கம்
(மருமகள்)

இல.20, நுவரேலியா வீதி,
கம்பளை.

(43987)

## திருமதி சின்னம்மா கந்தையா

சாவகச்சேரி டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டவரான சின்னம்மா கந்தையா 5-12-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முருகேசு கந்தையாவின் அன்பு மனைவியும், க. சிவக்கொழுந்துவின் (சங்கத்தானை, சாவகச்சேரி) சகோதரியும், கயிலைநாதன் (பிரான்ஸ்), கெங்கேஸ்வரன் (லண்டன்), சிதம்பரநாதன் (நாதன் ஸ்ரோர்ஸ், டச்சு றோட், மீசாலை), கணேஷநாதன், ரகுநாதன் (பரீட்சைப் பகுதி, யாழ். பல்கலைக்கழகம்), திருமதி க. கருணாதேவி, திருமதி உ. கலைவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், துஷ்யந்தன், துஷ்யந்தி, கிருஷாந்தி, ரமேஷ், கதீஷ், இந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5 - 12 - 96 பிற்பகல் 3.00 மணிக்கு திருநெல்வேலியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ரகுநாதன்
(மகன்)

தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

(43985)

## துரையப்பா பாலசுப்பிரமணியம்

(அத்தான், கிளி)

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய், வேலக்கைப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா பாலசுப்பிரமணியம் 4 - 12 - 96 அன்று அகால மரணமானார்.

இவர் அருந்ததியின் அன்புக் கணவரும், உதயசங்கர், கருணாசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சண்முகநாதன் (தபாலதிபர், திருமலை), கோபாலசிங்கம் (இ. போ. ச. டிப்போ, யாழ்), இராஜேஸ்வரி, தனபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், சுகந்தியின் அன்பு மாமனாரும், வைஷ்ணவி, ரேவதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-12-96) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
பா. உதயசங்கர்
பா. கருணாசங்கர்
(மகன்மார்)

வேலக்கைப் பிள்ளையார் கோயிலடி,
லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(43973)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சில நாடுகளில் இடம்பெறும்

# மனித உரிமை மீறல்களை கண்டிக்க அமெ. தயக்கம்

## மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு சாடல்

லண்டன், டிச. 6

''மனித உரிமைகளுக்கு குரல் கொடுப்பதாகக் கூறிக் கொள்ளும் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் தங்களது உடனடித் தேவைகளை அடைவதற்காக சீனா, பொஸ்னியா போன்ற நாடுகளில் இடம்பெறும் பெரும் மனித உரிமைகள் மீறல்களைக் கண்டுகொள்ளாது மௌனம் சாதிக்கின்றன.''

இப்படி சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பு நிறுவனம் அதன் ஆண்டறிக்கையில் குற்றஞ்சாட்டி உள்ளது.

தொழில் முதலீட்டு வாய்ப்புக்களை சீனாவில் பெறுவதற்காக அங்கு நடக்கும் மனித உரிமைகளை அமெரிக்கா பெரிதுபடுத்துவதில்லை.

பொஸ்னியாவில் இருக்கும் 55 ஆயிரம் நேட்டோ அமைதிப் படையினரின் உயிர்களுக்கு ஆபத்து நேரிடாமல் காப்பதற்காக அங்கே சுதந்திரமாக நடமாடித் திரியும் 67 பெரும் யுத்தக் குற்றவாளிகளை ஐரோப்பிய நாடுகள் கைது செய்யாமல் விட்டு வைத்துள்ளன.

அமெரிக்கா தலையிட்டுள்ள மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டு அமெரிக்காவின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இஸ்ரேல், பலஸ்தீனம், சிரியா ஆகிய நாடுகளில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் பற்றி அமெரிக்கா கண்டனம் தெரிவிப்பதில்லை.

அதிபர் யெல்ஸின் அதிபர் தேர்தலில் தோல்வியடைந்துவிடக் கூடாது என்பதற்காக ரஷ்ய இராணுவம் செச்சினிய விடுதலை இயக்கத்தின் மீது எடுத்த மிருகத்தனமான நடவடிக்கைகளை அமெரிக்கா கண்டிக்கவில்லை.

நெடுந்தூரப் பார்வை, நீண்டகால யுக்திகள் என்பன போன்ற புரிய முடியாத மொழிகளைப் பேசி உடனடியாகச் சாதிக்க வேண்டிய மனித உரிமைகளை மேலை நாடுகள் மறைத்துப் பூசி மெழுகிவிட்டன.

இப்படி அந்த அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (இ-10)

## பூட்ரஸ் பூட்ரஸ் காலி போட்டியிலிருந்து வாபஸ்

நியூயோர்க், டிச. 6

பூட்ரஸ் பூட்ரஸ் காலி ஐ. நா. பொதுச் செயலர் பதவிக்கு இரண்டாவது முறையாகப் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளார் என ஐ. நா. பாதுகாப்புச்சபையின் தலைவர் அறிவித்துள்ளார்.

பூட்ரஸ் பூட்ரஸ் காலி ஐ. நா. பொதுச் செயலர் பதவிக்கு இரண்டாவது முறையாகப் போட்டியிட்டு பாதுகாப்பு சபையிலுள்ள 15 நாடுகளில் 14 நாடுகள் அவரை ஆதரித்த போதிலும் அமெரிக்கா ''வீட்டோ'' எனப்படும் ரத்து அதிகாரத்தைப் பயன் படுத்தியதால் தெரிவாகும் வாய்ப்பை இழந்தார் என்பது தெரிந்ததே.

ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த ஒருவர் ஐ. நா. செயலர் பதவிக்கு தெரிவு செய்யப்படவுள்ளார். (இ-10)

## ஓய்வெடுக்க ஆலோசனை

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் குரல் பேச முடியாத அளவுக்கு முற்றிலும் குன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அளவுக்கு மீறிய விமானப் பயணங்கள், தொடர்ந்து ஆற்றிய உரைகள் ஆகியன அவரது தொண்டையைப் பாதித்துள்ளதாகத் தெரிகிறது.

நான்கு நாள்கள் தொண்டைக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என மருத்துவர்கள் கிளின்ரனுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். (இ-10)

# முஸ்லிம் முன்னேற்றக் கழகம் தொழுகைப் போராட்டம் நடத்தும்

தமிழ் நாட்டில் ஆளுநர் மாளிகை வளாகத்தை இன்று முற்றுகையிட்டு அங்கேயுள்ள மசூதியில் தொழுகைப் போராட்டம் நடத்தப்போவதாக தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பு அறிவித்திருக்கிறது.

அயோத்தியில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதி இந்து மதவாதிகளால் இடிக்கப்பட்ட பாபர் மசூதியை மீண்டும் கட்டித்தரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் நடக்கும் இந்தப் போராட்டத்தை தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

முஸ்லிம் அரசியல் அமைப்புகள் எதனையும் சேராத ஒரு சாரார் உத்தமபாளையத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் மகாத்மாகாந்தியைப் பழித்துப் பேசியதும் அதனால் வன்முறை ஏற்பட்டதும் வருந்தத்தக்கது எனவும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர்களின் போக்கு தமிழகத்தின் அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதாகும் என்று நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (இ-4)

# உலக அரங்கில்

## தமிழகத்துக்கு பதில் ஆளுநராக கிருஷ்ணகாந்த்

சென்னை, டிச. 6

தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி காலமானதால் ஏற்பட்டுள்ள ஆளுநர் வெற்றிடத்திற்கு ஆந்திரப் பிரதேஷ் ஆளுநர் கிருஷ்ணகாந்த் கூடுதல் பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த திங்கள் இரவு சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கே. எஸ். சுவாமி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

புதிய ஆளுநர் முறைப்படி நியமிக்கப்படும் வரை கிருஷ்ணகாந்த் தமிழக ஆளுநராகவும் பதவி வகிப்பார்.

## போராட்டம்

சேர்பிய அரசுக்கு எதிராக நடைபெற்றுவரும் போராட்டத்தை ஒடுக்க வன்முறையைப் பயன்படுத்தப் போவதில்லை என அமெரிக்க வெளியுறவுச் செயலரிடம் சேர்பிய வெளியுறவு அமைச்சர் லண்டனில் வைத்து உறுதியளித்துள்ளார்.

சேர்பியாவின் வாக்குறுதியை வைத்து அல்ல செயற்பாடுகளை வைத்தே நிலைமையைத் தீர்மானிக்க முடியும் என அமெரிக்கா பதிலளித்துள்ளது.

சேர்பிய உள்ளாட்சித் தேர்தல்களில் எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்துள்ள வெற்றியை நிராகரித்துவரும் அதிபர் மிலோசவிக்கு எதிராக கடந்த 18 நாள்களாக எதிர்க்கட்சிகளும், மாணவர்களும் போராட்டம் நடத்திவருகின்னர். (இ-10)

## வடமராட்சியில் விசேட ''பாஸ்''

வடமராட்சி டிச. 6

வடமராட்சிப்பிரிவில் வதியும் மக்களின் வதிவை உறுதிப்படுத்தும் வகையில் அப்பகுதி இராணுவ உயர் அதிகாரியினால் புதிய ''பாஸ்'' முறை ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பத்துவயதில் இருந்து 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்கே இந்தப் ''பாஸ்'' வழங்கப்படுகிறது.

போஸ்கார்ட் அளவில் நீல நிறமுடைய இந்த ''பாஸ்'' அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டுபின் இராணுவ உயரதிகாரியின் கையொப்பமும், முத்திரையுமிடப்படுகிறது.

மேலும், இந்தப்பாஸை பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருட்டு கவர் ஒன்று இராணுவத்தினரால்வழங்கப்பட்டு வருகிறது. (இ-15-173)

# ஜே. ஆரின் மறைவுக்கு கவலைப்படாதவர்!

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதத்தில் கொழும்பு மாநகரசபையில் கொண்டு வரப்பட்ட அனுதாபப் பிரேரணையை எதிர்த்து உரையாற்றி, வாக்களித்ததன் மூலம் சரித்திரம் படைத்திருக்கின்றார் நவ சமசமாஜக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

கொழும்பு மாநகரசபையில் அங்கம் வகிக்கும் நவசமசமாஜக் கட்சியின் ஒரே உறுப்பினரான அவர், ஜே. ஆரின் மறைவு குறித்துத் தாமும் தமது கட்சியும் கவலைப்படவில்லை எனத் தெரிவித்து அதனைப் பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

அவரைத் தவிர ஏனைய அனைத்து உறுப்பினர்களும் அனுதாபப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர்.

பொதுவாக இத்தகைய அனுதாபப் பிரேரணைகளை — உயிரிழந்தவர் எந்தக்கட்சியை, எந்த அணியைச் சேர்ந்தவராக இருந்தாலும் யாரும் எதிர்ப்பதில்லை என்பது அரசியல் மரபாகும்.

ஜே. ஆரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பிரேரணை கடந்த வாரம் கொழும்பு மாநகரசபையில், மாநகர மேயர் கே. கணேசலிங்கத்தினால் முன்மொழியப்பட்டபோது, அங்கு விக்கிரமபாகு கருணாரத்ன கூறியதாவது:-

''இருநூறு ஆண்டுகளாக காலனித்துவ ஆட்சியைப் பேணி வந்த முன்னணிக் குடும்பம் ஒன்றைச்சேர்ந்தவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

''அவரது ஆட்சிக் காலத்தில் — 1980 பொது வேலை நிறுத்தத்தை அடுத்து — வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களில் 37 பேர் இதுவரை தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். அவர்களுக்காக நான் கவலைப்படுகிறேன்;

அவரது ஆட்சிக் காலத்தில் காணாமல் போன மக்களுக்காக நான் கவலைப்படுகிறேன்;

உலகப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் பொது நூலகம் ஜே். ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் எரிக்கப்பட்டது குறித்து நான் கவலைப்படுகின்றேன்.

ஆனால் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மறைவு குறித்து நானோ எனது கட்சியோ கவலைப்படவில்லை. தயவு செய்து அதனைப் பதிவு செய்துகொள்ளுங்கள்'' என்றார். (உ)

# அரசாங்கத்திலிருந்து வெளியேறி தமிழர் உரிமைக்கு வழி காணுக!

## இடதுசாரிகளுக்கு விக்கிரமபாகு கருணாரத்ன அழைப்பு

''பிரிவைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். உண்மையான இடதுசாரிகளால் மாத்திரமே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை வழங்க முடியும் அந்த வகையில் அரசுடன் இணைந்துள்ள இடதுசாரிகள் அதிலிருந்து வெளியேறி இனவாதிகள் மற்றும் ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும் அவர்களது சுயநிர்ணய உரிமைவகள் கிடைப்பதற்கான வழிகைகளை செய்யவேண்டும்.

நவசமசமாஜக் கட்சிப் பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நவசமசமாஜ கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ''இன்றைய அரசியல் நிலையும் இனப்பிரச்சினையும்'' எனும் விடயம் பற்றிய கருத்தரங்கு கடந்த ஞாயிறன்று கொழும்பு கொம்பனி வீதியில் உள்ள கட்சி அலுவலக மண்டபத்தில்நடைபெற்றது.

கட்சியின் அரசியற்குழு உறுப்பினர் வ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய கலாநிதிவிக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

### சந்திரிகாவின் இரட்டை வேடம்

''அண்மையில் ஒரு பத்திரிகைப் பேட்டியில் தமிழர்களின் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஆனால் அவரது உண்மையான நோக்கம் அதுவல்ல.

பாரிஸ் நகரில் அண்மையில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், தமிழருக்கு சுயாட்சி வழங்குவதைப் பொறுத்தே இலங்கைக்கான நிதியுதவிகள் அதிகரிக்கப்படும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. அவர்களை திருப்திப்படுத்தவே ஜனாதிபதி தற்போது இப்படியாக பேசி வருகின்றார்.

தீர்வுத்திட்டத்தை அவருக்கு ஆதரவாக இருக்கும் ஈ. பி. டி. பி. போன்ற கட்சிகள் கூட ஏற்கமறுக்கின்றன.

தீர்வுத்திட்டத்துக்கு ரணிலிடம் ஆதரவு கோரி வருவதாக கூறும் ஜனாதிபதி அதே பேட்டியில் அவர்கள் பல கொலைகளுக்கு காரணமானவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு முரண்பட்ட நிலையாகும். உண்மையில் தனக்கு செய்து முடிக்கவிருப்பமில்லாத ஒரு விடயத்தின் பொறுப்பை இன்னொருவர் மீது சுமத்தும் தந்திரமே இதுவாகும்.

### சொன்னது ஒன்று செய்வது இன்னொன்று

இனவிவகாரத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கூறி இடதுசாரிகளின் ஆதரவைப்பெற்று அதன் மூலம் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றதன் மூலமே ஜனாதிபதி பதவிக்கு வர முடிந்தது. ஆனால் அதன் பின்னர் ஜனாதிபதியின் நடவடிக்கை எதிர்மாறானதாக உள்ளது.

எந்தவித தீர்வுத் திட்டமும் முன்வைக்கப்படாததன் காரணமாகவே விடுதலைப்புலிகள் யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வெளிநாடுகளை ஏமாற்றும் நோக்குடன் ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டது. அதுவும் இனவாதிகளின் நடவடிக்கை காரணமாக அனைத்து சிறப்பியல்புகளையும் இழந்து அதுகாணப்படுகின்றது.

### இடதுசாரிகள் மூலமே தமிழர் உரிமைகள்

அதேவேளை கொடூர யுத்தத்தின் மூலம் 5 தொடக்கம் 6லட்சம் மக்கள் வடக்கில் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் மாத்திரமின்றி தெற்கிலும் தொழிலாளர்களுக்கெதிரான ஒடுக்குதல்களில் அரசு இறங்கியுள்ளது. இதற்கு அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய வாதிகளின் பின்னணியே காரணமாகும்.

தமிழ் மக்களே, விடுதலைப் புலிகளோ தமது போராட்டத்தில் வெற்றி பெற வேண்டுமானால் அவர்கள் தென்பகுதியில் உள்ள இடதுசாரி மற்றும் தொழிலாளர் அமைப்புகளுடன் இணைந்து செயற்பட வேண்டும். அதன் மூலமே தமது சுயநிர்ணய உரிமைகளை அவர்கள் வென்றெடுக்க முடியும். இப்படி அவர் கூறினார்.

## அம்புலன்ஸ்

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களகத்துக்கு ''யுனிசெவ்'' நிறுவனத்தால் வழங்கப்படவிருக்கும் அம்புலன்ஸ் வாகனம் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கேவழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை, பண்பாட்டுப் பேரவை
செல்வச்சந்நிதி, தொண்டமனாறு.

வரும் 22 - 12 - 96 ஞாயிறு திருவாசக விழா நடைபெறவுள்ளது.

சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் பாடசாலை மாணவர்களுக்கான திருவாசகப் போட்டியும் அதற்குரிய பெறுமதியான பரிசில் வழங்கலும். விவரங்கள், 26 - 11 - 1996 உதயனில் வெளியாகியிருந்தன.

இவ்வண்ணம்,
பேரவையினர்.

(43952)


## விசேட அ. அட்டை

வலி. தென். மேற்கு டிச. 6 சங்கானை பிரதேச செயலக அலுவலகத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன.

இக் காரியாலயத்தால் இதுவரை மூவாயிரம் விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

(இ-145)

## பாவனைக்கு உதவாத கொப்பரா

தென்மராட்சி, டிச. 6 தொடர்ந்து பெய்த மழையினால் பழுதடைந்த தேங்காய் கொப்பராவை சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கைப்பற்றிய சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி டச்சு வீதியில் இடம் பெற்றது.

சுகாதாரப் பகுதியினரால் கைப்பற்றப்பட்ட 4 ஆயிரம் கிலோ கொப்பராவும் அழிக்கப்பட்டது.

தேங்காய் எண்ணெய் தயாரிப்பதற்காக இவை வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-117)


யா/நுணாவில் மேற்கு
அ. த. க. பாடசாலை
சாவகச்சேரி
பரிசில் நாள்

காலம்: 07-12-1996 சனிக்கிழமை
பி. ப. 3-00 மணி (புதிய நேரம்)

முதன்மை விருந்தினர்:
திரு. இ. கணேசன் அவர்கள்
[பிரதிக் கல்விப் பணிப்பாளர் - சாவகச்சேரி]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(சி-3675)

BOND INSTITUTES
58, A ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

C/L '96

பரீட்சைக்கான விசேட மாதிரி வினாத்தாள்கள் - [எல்லாப் பாடங்களும்] விடைகளுடன் 6 — 12 — 96 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் BOND INSTITUTES
வடமராட்சி ★ சதா பொண்ஸ் கல்வி நிலையம்
★ மொடேர்ன் ஸ்ரோர்ஸ்,
★ சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை

ஆண்டு - 9

அரசாங்கத்தால் டிசம்பரில் நடத்தப்பட இருக்கும் கனிஷ்ட தொழில் நுட்ப பரீட்சைக்கான வர்த்தகம் — விவசாயம் — மனையியல் மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் 8 — 12 — 96 தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

புலமைப்பரிசில் '97

8 — 12 — 96 ஞாயிறு வழமைபோல் பயிற்சிப் பரீட்சை எம்மால் நடத்தப்படும்.

BOND INSTITUTES

(43949)

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

கணக்கியல்
திரு. பாலவாசன்

98 தொங்கல்
2.00 To 3.00
97 பங்குடைமை
3.00 To 4.40

ஆரம்பம்:
8 - 12 - 1996

(43932)

சேவைநலன் பாராட்டு

திரு. ஆறுமுகம் தம்பையா B. Sc.
(உப அதிபர், தேவரையாளி இந்துக்கல்லூரி)

அறுபதாவது அகவைவரை அயராது அரும்பணியாற்றிய ஆங்கில ஆசானே!
இன்றையபெரும் பாராட்டில்நாமும்மகிழ்வதுடன் எமது பாராட்டுக்களையும், நெஞ்சம் நிறைந்த நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

பழைய மாணவர்கள்.
தேவரையாளி இந்துக்கல்லூரி.

(9032)

தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)
அறிவித்தல்

பதவிகளுக்கான விண்ணப்பம் கோரல்

30-11-1996 ஆம் திகதியில் எம்மால் விளம்பரம் செய்யப்பட்ட ''பதவிகள் விண்ணப்பம் கோரல்'' விளம்பரத்தின்படி முடிவு திகதி 7-12-96 என அறிவிக்கப்பட்டிருந்தது. அது 10-12-96 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பொது முகாமையாளர்.

1996 - 12 - 04 (சி-3677)

நினைவஞ்சலி

''ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.''

9 ஆம் ஆண்டு



அமரர்
செல்லையா
பொன்னம்பலம்

தோற்றம்: 10 — 11 — 1910
மறைவு: 25 — 12 — 1987

1 ஆம் ஆண்டு



திருமதி
பொன்னம்பலம்
அம்பிகை

தோற்றம்: 24 — 10 — 1923
மறைவு: 18 — 11 — 1995

திதி: 06 - 12 - 1996

அன்பின் உருவாய் - பண்பின் சிகரமாய்-பாசமுடன் வாழ்ந்து, பண்பை வளர்த்து செழிப்புற வாழ வழிசமைத்த எம் அன்புத் தெய்வமே! இன்று உங்கள் பிரிவால் வாடுகிறோம்.

அன்பான ஆருயிர்த் தெய்வமே! பாசத்துடனும், பண்புடனும் எமைக் காத்த குலவிளக்கே! எமது நெஞ்சங்களில் எப்பொழுதும் நிலைத்து வாழும் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கிறோம்.
உங்கள் பிரிவின் துயரால் வாடும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு, இணுவில்.

பளை பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பளை.
கூறுவிலை கோரல்
லொறித் திருத்தம்

எமது சங்கத்தின் 24/9478 இலக்க இருசு லொறி திருத்தம் செய்வதற்காக கூறுவிலைகள் பதிவு பெற்ற திருத்துநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

வேலை விவரம்:-
1. எஞ்சின் திருத்த வேலை.
2. பொடி மீன் திருத்தம் செய்தல்.
3. பெயின்ற் அடித்தல். (வாணிஸ் எழுத்து வேலை உட்பட.)
4. வயறிங்வேலை.
5. டிங்கர் வேலை.

நிபந்தனைகள்:-
1. சங்கத்தில் பெறும் விண்ணப்பப் பத்திரத்தில் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.
2. பாவிக்கப்படவுள்ள பொருள்களினதும், உதிரிப்பாகங்களினதும் விவரமும், விலையும் விவரமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
3. ஒவ்வொரு வேலைக்குமான கூலி தனித்தனியாகக் கோரப்பட வேண்டும்.
4. தெரிவு செய்யப்படுபவர் மீளளிக்கப்படக்கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ரூபா 1,000/- செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 16 - 12 - 96

விண்ணப்பப் படிவத்தை ரூபா 10/- கட்டிச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:-
டிசம்பர் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் லொறி பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

பொது முகாமையாளர்,
பளை - ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
பளை.

(C/3672)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

யா / கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம்

## வாழ்த்துகிறோம்

1995 க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற எமது மாணவர்களையும், அவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ சிவாகினி | 4D | 3C | S |
| சோ. கலைபாரதி | 2D | 3C | 2S |
| பா. பாலப்பிரியா | 2D | 4C | |
| கி. யோகினி | D | 6C | |
| வே. ஜெயகாந்தன் | D | 5C | |

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பெற்றோர்கள்.

யாழ். கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம். (சி/3671)



INSTITUTE OF INFORMATICS STUDIES
JAFFNA - SRILANKA

**NEW BATCHES: 7&9-12-96** 9 a. m.

● COMPUTER COURSES:
★ BASIC ★ PASCAL ★ C/C++
★ d BASE III + ★ LOTUS 123

● ENGINEERING DRAWING
(Specially for Engineering Students)
● SHORT HAND & TYPE WRITING

COURSES CONDUCTED AT:
★ 68, CLOCK TOWER ROAD, JAFFNA.
★ NAVALAR MADAM, KARAVEDDY.

(43942) - DIRECTOR



## BRIGHT INSTITUTE

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள ஒழுங்கை)
10, பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

### 1997 க்கான புதிய வகுப்புகள்

**ஆண்டு 5, 6, 7, 8, 9, 10, G.C.E. (O/L) 97**
**07-12-96 பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகிறது**

தனித்துவம் வாய்ந்த எமது ஆசிரியர் குழு:

ஆங்கிலம் — திரு. S. K. மகாலிங்கம்
வர்த்தகம் — திரு. A. அகஸ்ரின்
சமூகக்கல்வி — திரு. K. பத்மநாதன்
செல்வி N. பாலச்சந்திரன்
தமிழ் — திரு. S. நடராஜா
திருமதி S. A சிகாமணி
விஞ்ஞானம் — திரு. S. செல்வநாயகம்
செல்வி P. பாலச்சந்திரன்
கணிதம் — Kana Pararajasekaran

★ அண்மையில் வெளிவந்த G.C.E. O/L முடிவுகள் மீண்டுமொருமுறை எமது கல்வி நிறுவனத்தின் தனித்துவத்தை வெளிக் கொணர்ந்துள்ளது.

| | தோற்றியோர் | D | C | S |
|---|---|---|---|---|
| கணிதம் | 25 | 20 | 3 | 2 |
| வர்த்தகம் | 25 | 25 | — | — |
| விஞ்ஞானம் | 25 | 15 | 5 | 5 |
| தமிழ் | 25 | 18 | 7 | — |
| சமூகக்கல்வி | 25 | 12 | 5 | 8 |

எமது கல்வி நிறுவனத்தின் திறமைக்கு வித்திட்ட எமது அனுபவம் வாய்ந்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எம்மோடு ஒத்துழைத்த மாணவ மணிகளுக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்கள்!

★ எல்லாப் பாடமும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

★ கணிதம் வாராந்தம் எட்டு (8) மணித்தியாலங்கள் நடைபெறும்.

நிர்வாகி.

(43971)


தேர்தல் நடைபெறும்

# உள்ளூராட்சி சபைகளின் விவரமும் உறுப்பினர் எண்ணிக்கையும்

சொழும்பு, டிச. 6

வடமாகாணத்தில் தேர்தல் நடத்த அரசு உத்தேசித்திருக்கும் உள்ளூராட்சி சபைகளின் விவரமும் அவற்றுக்குத் தெரிவு செய்யப்படவிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

**யாழ். மாவட்டம்**

★ யாழ். மாநகரசபை — 23
★ வல்வெட்டித்துறை நகரசபை — 09
★ பருத்தித்துறை நகரசபை — 09
★ சாவகச்சேரி நகரசபை — 11
★ ஊர்காவற்றுறை பிரதேசசபை — 11
★ நெடுந்தீவு பிரதேச சபை — 09
★ வேலணை பிரதேச சபை — 11
★ வலிகாமம் மேற்கு பிரதேசசபை—14
★ வலிகாமம் வடக்கு பிரதேசசபை—21
★ வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை — 16
★ வலிகாமம் தெற்கு பிரதேச சபை—16
★ வலிகாமம் கிழக்கு பிரதேச சபை—12
★ வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை — 18
★ பருத்தித்துறை பிரதேச சபை — 09
★ சாவகச்சேரி பிரதேச சபை — 15
★ நல்லூர் பிரதேச சபை — 12

**கிளிநொச்சி மாவட்டம்**

★ கரைச்சி பிரதேச சபை — 19
★ பச்சிலைப்பள்ளி பிரதேச சபை — 09
★ பூநகரி பிரதேச சபை — 10

**மன்னார் மாவட்டம்**

★ மன்னார் பிரதேசசபை — 14
★ நானாட்டான் பிரதேசசபை — 09
★ முதலி பிரதேசசபை — 09
★ மாந்தை மேற்குப் பிரதேச சபை — 12

**வவுனியா மாவட்டம்**

★ வவுனியா வடக்குப் பிரதேச சபை — 13
★ வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை — 09
★ வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை — 10
★ வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபை — 09

மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சிசபைகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் 35 சதவீதமானோர் இளைஞர்களாக இருக்க வேண்டும் என்பது குறித்தும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கிணற்றில் விழுந்து மரணம்

கிணற்றில் விழுந்து மரணமான ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது.

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் நடந்த இச்சம்பவத்தில் துரையப்பா பாலசுப்பிரமணியம் (வயது 52) என்பவரே மரணமானவராவார்.

மழை காரணமாக நிரம்பியிருந்த கிணற்றில் கையால் வாளியைப் பிடித்து தண்ணீர் அள்ளியபோது அவர் தலைகுப்புற கிணற்றில் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-155)

## இயங்க ஆரம்பம்

யாழ். போதனாவைத்திய சாலை மீள இயங்கத் தொடங்கியதிலிருந்து இயங்காதிருந்த வார்ட்டுக்களில் ஒன்றான சரும நோய் வார்ட் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்தகால இராணுவநடவடிக்கைகளினால் சேதமடைந்திருந்த இந்த வார்ட்டும் திருத்த வேலைகளுக்கு உட் படுத்தப்பட்டிருந்தமைமையினாலும் —

இடைக்காலத்தில் கடும் நோய் சிகிச்சை வைத்திய நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றமுடியாதிருந்த நிலையினாலுமே — இந்தவார்ட் இயங்கமுடியாமல் இருந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ- 15)

## திருடர்கள் கைவரிசை

கொக்குவில் பகுதியில் ஊரடங்கு அமுலில் உள்ள நேரம் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

மக்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு செல்லும் திருடர்கள் வீட்டார் உறக்கத்தில் இருக்க, திறந்திருக்கும் ஜன்னல் வழியே கைக்கு எட்டிய பொருள்களை எடுத்துச் செல்கின்றனர்.

நாய்கள் குரைத்தாலும் திருடர்களா? அல்லது இராணுவத்தினரா? என்பதை இனங்காண முடியாது வீட்டுக்காரர்கள் அச்சத்துடன் இரவுப் பொழுதைக்கழிக்கின்றனர்.

இதே வேளை சுதுமலைப் பகுதியில் ஊரடங்கு வேளையில் நடமாடிய திருடர்கள் அப்பகுதியில் மறைந்திருந்த இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்ட சம்பவமும் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப் பட்டது. (இ-4)

## தேர்தல் நடத்தும் அரசின் முயற்சி ஆயுதம் பெறும் நடவடிக்கையே

### குமார்பொன்னம்பலம் கூறுகிறார்

''வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசு எடுக்கும் முயற்சி, வெளிநாட்டில் அரசாங்கம் பற்றிய நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தி போருக்காக மேலும் ஆயுதங்களை பெறும் ஒரு நடவடிக்கை ஆகும்''.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார்பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று இராணுவத்தினரின் ஆட்சியே யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.

இந்த சூழ்நிலையில் நியாயமான ஒரு தேர்தலை அங்கு நடத்த முடியும் என்பதில் எந்த தமிழருக்கும் நம்பிக்கை கிடையாது.

சமூக சூழ்நிலையில் உள்ள தென்னிலங்கையில் தேர்தலைத் தொடர்ந்து பின்போட்டு வரும் அரசாங்கம் யுத்தம் நடைபெற்று வரும் யாழ்ப்பாணத்தில் அவசரம் அவசரமாகத் தேர்தலை நடத்த நினைப்பதன் மர்மம் புரியவில்லை என்றும் அவர் கூறினார். (இ-3)


யா/புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம்

இளைப்பாறிய அதிபர் அருட்செல்வி
**எம். ஜெறோம் A. C.**
அவர்களின்

## சேவைநலம் பாராட்டுவிழா

காலம்: **07-12-1996** சனிக்கிழமை காலை 9 மணி
இடம்: பாடசாலையின் திறந்த வெளி அரங்கு

தங்களை இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.**

யா/ புனித ஜோண்
பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம். [43980]



## வாழ்த்துகிறோம்

யா/தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை
மகாவித்தியாலய
க. பொ. த (சா/த)
பரீட்சை முடிவுகள் - 1995

தோற்றியோர் எண்ணிக்கை - 34
க. பொ. த (உ/த) வகுப்புக்கு தகுதியுள்ளோர் - 20
க. பொ. த (உ/த) வகுப்புக்கு சித்தியடைந்தோர் வீதம் - 59%

3D யுடன் சித்தியடைந்தோர் எண்ணிக்கை - 03
2D யுடன் சித்தியடைந்தோர் எண்ணிக்கை - 05
1D யுடன் சித்தியடைந்தோர் எண்ணிக்கை - 03

3D, 3C, 2S – செல்வன் சூடாமணி தர்சன்
3D, 3C, 1S - செல்வி சிவானந்தா தர்சினி
3D, 2C, 1S - செல்வி நரேந்திரா மேனகாதேவி

மேற்படி சிறந்த பரீட்சை முடிவுக்காக அயராது உழைத்த ஆசிரியர்களையும், சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.

- பெற்றோர்

(43975)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பிராய் மேற்கில் 3 படுக்கையறைகள், ஹோல், குசினி, போட்டிக்கோ, குளியலறை, மலசலகூடம், தண்ணீர்த் தாங்கி என்பவற்றை உள்ளடக்கிய அழகிய வீடு. மா, பலா, தென்னையுடன் தோட்டம் செய்யக்கூடிய 14 பரப்புக்காணி. தோட்டக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 49, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். (43967)

1996 க. பொ. த. சா/த பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்குரிய இலத்திரனியல் விஞ்ஞான வழிகாட்டி நூல் விற்பனையாகிறது. தொடர்பு: யூப்பிட்டர் கல்வி நிலையம், சங்கத்தானை, சாவகச்சேரி. (சி/3678)

## தவறிவிட்டது

இளையதம்பி நடராசா (11 ஆம் வட்டாரம், புங்குடுதீவு) 313631060 V எனும் இலக்கமுடைய எனது அடையாள அட்டை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள்: இல. 11/8, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43948)

மு. மோகனதாஸ் (இல. 650761847 V) ஆகிய எனது அடையாள அட்டை மருதனாமடச் சந்திக்கும், உடுவிலுக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43953)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் குறுகிய காலத்தில் ஆங்கிலம் பேசப் பயில. (16 வயதிற்கு உட்பட்ட மாணவருக்கு 50/- மாதம். மேற்பட்ட மாணவருக்கு 100/-) தொடர்பு: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, ஜெயந்தி ஸ்ரோர்ஸ், 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (43934)

## நூலாலயம்

பெரியோர், இளைஞர், யுவதிகள், சிறுவர்களுக்கான பயன் தரும் புத்தகங்களை தெரிவு செய்து வாசித்துமகிழ 'லிங்லெண்டிங் லைபிரறி,' 41, தபாலக வீதி, சாவகச்சேரி. Ling Lending Library. (43650)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த A/L படித்த 35 வயது, அச்சுவினி, 8 இல் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. சாதக குறிப்பு, விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். இல;- 562 மே/பா உதயன் பணிமனை யாழ்ப்பாணம். (43892)

## திருமண சேவை

துர்க்கா திருமண சேவை. திங்களில் இருந்து புதன் வரை. நாவலர் றோட், 178 ஆம் இலக்க இல்லத்திலும், (காலை 8.00 – 4.00 வரை) மறுநாள்களில் புலோலியிலும் தொடர்பு கொள்ளலாம். (43916)

## வினா விடை

G.C.E. O/L மாணவர்களுக்கான கடந்த கால சித்திர பாட வினா விடைத் தொகுப்பு. எஸ். இராமச்சந்திரன், வெளியீடு - ரலன்ற் இன்ஸ்ரிரியூட். கிடைக்குமிடம்: தமிழ்ப்பூங்கா புத்தகசாலை, நெல்லியடி. விலை ரூபா 35/-. (43944)

## "திருவெம்பாவை"

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் அல்லது சலவைப்பவுடர் வெற்றுப் பக்கற் 10 சேர்ப்பித்து — திருவெம்பாவை புத்தகமும், நடராஜர் படமும் பெற்றுக் கொள்ளுங்கள். 'மில்க்வைற்' (சி/3679)

## இசை வகுப்புகள்

ஓகன், புல்லாங்குழல், கிற்றார் வகுப்புகள் சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் நடைபெறும். முகவரி: புவனகிரி, ஸ்ரேசன் றோட், கோண்டாவில் (நிரு கல்வி நிறுவனத்திலிருந்து 500 யார் கிழக்கே.) (43800)

## வினாப் பத்திரம்

எதிர்வரும் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கடைசி ஆங்கில வினாப் பத்திரம் பின்வரும் விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். இல. 193/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். ஆசிரியர் சு. மகேஸ்வரன் (யா. இ. க.) (43976)

---

**NEW SCIENCE ACADEMY**
NALLUR

**கணக்கியல்**

திரு. பாலவாசன்

"ஒற்றைப் பதிவு"

ஆரம்பம்: **11-12-96**
6.15 a.m.
(43962)

---

**B. A, Part I**
**B. A. Part II** ] யாழ்.
**1 ST in Com,**

ஆரம்பம்: **07 - 12 - 96**
10 மணி

G. A. Q விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு:
S. **அருள்நங்கை**
**புதிய**
**உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(43901)

---

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின்**
**இணை உப அதிபர்**
**செல்வி லீனா பி. தேவா B. Sc.**
அவர்கட்கு எமது
**நல்லாசியையும், வாழ்த்துக்களையும்**
தெரியப்படுத்துகின்றோம்.

மக்கள் சேவையே மகேசன் சேவையென எமது சங்க வளர்ச்சிக்கு, முதலுதவித் தொண்டர்களைப் பயிற்றுவித்து உன்னத சேவை செய்துள்ளீர்கள். உங்கள் பணி வளர்க என வாழ்த்துகிறோம்.

-இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணப்பிரிவு.

(சி-3676)

---

# கண்ணீர் அஞ்சலிகள்

எங்கள் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர்
செல்வி விஜயராணி வேலுப்பிள்ளை
அவர்களின் அன்புச் சகோதரர்

## டாக்டர் வே. செல்வராசா

அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தார் யாவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய். (43958)

---

**NEW SCIENCE ACADEMY**
**NALLUR**

## 1997ஆம் ஆண்டிற்கான புதிய பிரிவுகள்

**ஆண்டு 5 முதல் G. C. E. O/L வரை**

எமது ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| தமிழ் | திரு. தங்கராஜா<br>திரு. ஜெயபால் |
| கணிதம் | திரு. ஜெயக்குமார்<br>திரு. யோகேஸ்வரன் |
| விஞ்ஞானம் | திரு. ராஜ்தேவன்<br>திரு. லோகநாதன் |
| ஆங்கிலம் | திரு. செல்வரட்ணம் |
| சமூகக்கல்வி | திரு. கோபி<br>திரு. பத்மநாதன் |
| வர்த்தகம் | திரு. சகாயராஜா |

**ஆரம்பம்: 09 - 12 - 96** பி. ப. 3.00 மணி

★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ **விசேட [illegible] விரைவில் ஆரம்பமாகின்றன**

(43961)

---

# ராஜா கல்வி நிலையம்

(தவராசா ஆசிரியரின் இல்லம்)
நந்தாவில் லேன், கொக்குவில்.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

வகுப்பு: **ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை**
**சகல பாடங்களும்**

காலம்: **08 - 12 - 96 ஞாயிற்றுக்கிழமை**
காலை 7-00 மணி முதல்

மாதம் தோறும் பரீட்சை வைத்து தேர்ச்சி அறிக்கை வழங்கப்படும். பாடத்திட்டம் பூரணமாக முடிக்கப்படும்.

★ 1996 இல் எமது நிலையத்தில் க. பொ. த. (சா/த) வகுப்பில் கற்ற 24 பேரில் 23 பேர் க. பொ. த. (உயர்தர) வகுப்புக்கு தகுதி பெற்றுள்ளனர்.

★ ஒரு வகுப்பில் 30 மாணவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

-- நிர்வாகி

[9037]

---

# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 07 | 18 |
| 08 | 11 |
| 1926 | 1995 |

## திருமதி இராசைய்யா நாகம்மா

(மாசிலாமணி)

**திதி: 6-12-1996**


அன்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வாழ்ந்த அன்புத் தெய்வமே அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

44/1, கொழும்புத்துறை றோட்,
சுண்டுக்குளி. (43972)

---

# ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்

## திருமதி நவமணி தம்பாபிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

மண்ணக மலர்வு: **17–05–1930**
விண்ணக மறைவு: **30–11–1994**
திதி: **06–12–1996**

அன்பால், பண்பால், அறிவால்
எம்மை வழிநடத்திய அம்மாவே!
ஆண்டு இரண்டு சென்றிடினும்
எங்கள் நெஞ்சங்கள் ஆறாது.

உங்கள் நினைவில் வாழும்
கணவன், பிள்ளைகள்.

'நவமகால்,'
கல்வளை,
சண்டிலிப்பாய்.

(9027)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விதை கிழங்கு விவகாரம்

விவசாயச் செய்கைக்கெனக் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட விதை உருளைக் கிழங்கு, உணவுக்கான (கறிக்கான) கிழங்காகச் சந்தை ஒன்றில் விற்கப்பட்டிருக்கிறது!

உணவுக்குரிய உருளைக் கிழங்குக்கு நிலவும் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி, விவசாய உற்பத்திக்குக் குந்தகம் விளைவிக்கும் இச்செயலில் சிலர் ஈடுபட்டனர்.

இத்தனைக்கும் விதை உருளைக் கிழங்கானது, மற்றையதைப் போல் ருசியானது அல்ல; சமையல் பாகத்துக்கும் ஒவ்வாதது.

அத்தோடு விதை உருளைக் கிழங்கு வெளிநாட்டிலிருந்து (அனேகமாக ஹொலண்ட் நாட்டிலிருந்து) இறக்குமதி செய்யப்படுகின்றது. அது அங்கிருந்து கொழும்புக்கு வந்து, பின்னர் யாழ்ப்பாணம் வந்து விவசாயியின் கைகளைச் சேர நீண்ட நாள்கள் செல்லும்.

அதனால், ''பக்ரீறியா'' மற்றும் நோய்த் தொற்றுக்களால் பாதிக்கப்பட்டு, பழுதடைந்து (அழுகிப்) போகாமல் இருப்பதற்காக, விதை உருளைக் கிழங்குக்கு இரசாயனப் பொருள்கள் விசிறப்படுவது உண்டு.

இரசாயனப் பொருள்களைக் கழுவிய பின்னரே விதை உருளைக் கிழங்கு, கறி உருளைக் கிழங்காக சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது என்று எடுத்துக் கொண்டாலும்—

அதனை உண்பவர்கள் ஏதோ ஒரு வகையிலாவது நோய்ப் பாதிப்புக்காளாவர்.

எனவே விதை உருளைக் கிழங்கை, ஒரு சிலரின் வியாபார நயத்துக்காக, கறிக் கிழங்காக விற்பது நுகர்வோரை மோசடி செய்து அவர்களுக்கு நோய் ஆபத்தை விளைவிப்பதாகும்.

அதே போல, விவசாயச் செய்கைக்குக் கொண்டுவரப்பட்ட விதை உருளைக் கிழங்கு, உணவுக்காக மாறும் போது உணவு உற்பத்திப் பெருக்கம் பெருமளவில் பாதிக்கப்படும்.

உணவுக்காகப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு விதை கிழங்கிலிருந்தும் சராசரி ஆகக் குறைந்தது 6கிழங்குகள் விளையும். தருவிக்கப்பட்ட விதை கிழங்கில் குறைந்த அளவே கறிக் கிழங்காகியதாக வைத்துக் கொண்டாலும், உற்பத்தி வீழ்ச்சி கணிசமாக இருக்கும்!

இது குடாநாட்டினது விவசாய உற்பத்திக்குப் பெரும் அடியாகும்; விவசாயிகளின் வயிற்றில் அடிப்பதுமாகும். இத்தகைய மக்கள் விரோதச் செயல்கள் முன்னேற்பாட்டுடனேயே தடுக்கப்பட வேண்டும். இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் உரிய விதத்தில் தண்டிக்கப்பட்டால்மட்டுமே ஏனைய துறைகளுக்கும் பரவாமற் தடுக்கலாம். ஆனால் சிவில் நிர்வாகம் அந்தளவுக்குச் சக்தியுள்ளதாக இன்னும் மாறவில்லை!

கமநல சேவை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்ட விதை உருளைக் கிழங்கு, உண்மையான கமக்காரனை ஏய்த்துவிட்டு வியாபாரிகளின் கைகளுக்குப் போனது எப்படி? அல்லது விவசாயிகளே வியாபாரிகளாக மாறினரா? அவ்வாறாயின் ஏன்?

சமூக நன்மை கருதி —

இவை ஆழமாக, விரிவாக ஆராய்ந்துபதில்கண்டுபிடிக்கப்பட வேண்டிய பெருங் கேள்விகள்!

# உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து ஜனாதிபதியிடம் கூட்டணி பேசும்

கொழும்பு, டிச. 6

வடமாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்தும் அரசின் முடிவு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு எதிர் வரும் புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்தவிருக்கிறது.

அதேசமயம் ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பும் இது குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த விருக்கின்றது.

விரைவில் இந்தப் பேச்சு இடம் பெறும் என தமிழ்க் கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கூட்டமைப்பில் ஈ.பி.டி.பி மற்றும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ், ரெலோ ஆகியன இடம் பெற்றுள்ளது தெரிந்ததே.

(இ-3-150)

## தேர்தல் நடத்துவதில் படையினர் ஆர்வம்

கொழும்பு, டிச. 6

வடமாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தேர்தல் நடத்துவதில் படையினர் தரப்பு பெரும் ஆர்வம் காட்டுவதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வடமாகாணத்தை விடுவிப்பதில் கண்ட வெற்றியை உறுதி செய்யும் வகையில் தேர்தலை நடத்தி முடிப்பதில் படைத் தரப்பு தீவிரமாக இருப்பதாகவும் —

பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையில் நட்புறவை வளர்க்க பிரஜைகள் குழு அமைக்கப்பட்டு வருவதாகவும் —

பிரஜைகள் குழுவினரைத் தேர்தலில் போட்டியிட வைக்க முயற்சி எடுக்கப்படலாம் என்றும் —

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-150)

## யாழ். கல்வி வளர்ச்சியில் அரசு விசேட கவனம்

### நாடாளுமன்றில் அமைச்சர்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி வசதிகளை விருத்தி செய்வதில் அரசாங்கம் விசேட கவனம் எடுக்கும் என்று கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரானா தெரிவித்துள்ளார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தை நாடாளுமன்றத்தில் முடித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

குடாநாட்டில் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான கல்வி உபகரணங்களை வழங்குவதற்காக ஒரு கோடி 16லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சொன்னார்.

(அ-4)

## ஒளி விழா

யாழ். புனித சார்ள்ஸ் மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு ஒளி விழா இடம்பெறும். (இ)

## பாரூக் அப்துல்லா தப்பினார்

ஸ்ரீநகர், டிச. 6

காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா நேற்று ஸ்ரீநகரில் குண்டு வெடிப்பில் இருந்து மயிரிழையில் தப்பினார். (இ)

## தப்பிய படையினரைத் தேடிப்பிடிக்க கிராமசேவையாளருக்கு 2 வாரகால அவகாசம்

கொழும்பு, டிச. 6

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய படையினரைக் கண்டுபிடித்து ஒப்படைக்க கிராம சேவையாளர்களுக்கு இரண்டு வார கால அவகாசம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தப்பி ஓடிய படையினரைக் கண்டுபிடித்து பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்குமாறு கிராம சேவையாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

அதே வேளை — தப்பி ஓடிய படையினரைக் கண்டுபிடிக்கப் பொலீஸார் தீவிர தேடுதல்களைத் தெற்கில் கிராமம் கிராமமாக மேற்கொண்டு வருகின்றனர்.

(இ-3-150)

## நீரிழிவு முகாம்

யாழ்ப்பாணம், டிச. 6

நல்லூர் லயன்ஸ் கழகம் யாழ். போதனா வைத்திய சாலை மருத்துவர்களின் ஆதரவுடன் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சன சமூக நிலையத்தில் நீரிழிவு பரிசோதனை முகாமொன்றினை நாளை சனிக்கிழமை நடத்தவுள்ளது.

காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இந்த முகாம் நடத்தப்படும்.

(இ-ரி)

## தூத்துக்குடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூத்துக்குடியில் இருந்து பொருள்களை ஏற்றிவரும் வத்தைகள் மற்றும் சிறு படகுகள் மூலம் விடுதலைப் புலிகள் ஊடுருவி கொழும்புத் துறைமுகத்தைத் தாக்கலாம் என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்ததை அடுத்து புதன்கிழமை காலை ஜனாதிபதிக்கும் அஷ்ரப்புக்கும் இடையில் பல மணி நேரம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இதன் பின்னரே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த வருடமும் இதே போன்று தூத்துக்குடியில் இருந்து வத்தைகள் மற்றும் படகுகள் கொழும்புத்துறை முகத்துக்குள் வர தடைவிதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

### முன்னரும் தடை இருந்தது

ஆனால் மேற்குப்பிரிவு கடற்படை கொமடோர் அமரவீரவின் எழுத்து மூலமான கடிதத்தையடுத்து தாம் இந்தத் தடையை அப்பொழுது நீக்கியதாக ஜனாதிபதியிடம் அஷ்ரப் தெரிவித்தார்.

தூத்துக்குடி மீனவர் சங்கம் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர், வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்தின ஆகியோரின் வற்புறுத்தலையடுத்தே இத் தடை அப்பொழுது நீக்கப்பட்டதாகவும் அஷ்ரப் கூறினார்.

கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பு விடயத்தில் முன்னரும் தாம் தலையிடவில்லை என்றும் —

இனியும் தலையிடப் போவதில்லை என்றும் — அஷ்ரப் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து புளி, அரிசி, சர்க்கரை, நெத்தலி போன்ற பொருள்கள் கொழும்புக்குத் தூத்துக்குடி மார்க்கமாகவே எடுத்துவரப்படுகின்றன.

தூத்துக்குடித் துறைமுகத்துக்கும் கொழும்புத் துறைமுகத்துக்கும் இடையில் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் தினமும் சுமார் 40 வத்தைகள் ஈடுபட்டு வந்தன என்றும் —

இலங்கை அரசின் இந்தத் தடை காரணமாக தூத்துக்குடியிலும் கொழும்புத்துறைமுகத்திலும் சுமார் 5 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது.

(இ-3-150-10)

# ஆழ்ந்து அகன்று விரிந்துள்ள சக்தியின் தோற்றமும் வடிவங்களும்

உயிர்கள் இறைவனால் படைக்கப்பட்ட பொருள்கள் அல்ல. ''என்று நீ அன்று நான் உன்னடிமை அல்லவோ'' என்பது போல ஆன்மாக்கள் என்று இருந்தனவோ அன்றே இறைவனும் இருந்தான்.

ஆணவ இருளில் ஆன்மாக்கள் கட்டுண்டு கண்ணில்லாக் குழவிகளைப் போல் கிடந்தன. இறைவன் தனது அளப்பற்ற கருணையால் அந்த ஆன்மாக்களாகிய உயிர்களுக்கு உடம்பையும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவற்றையும் உலகத்தையும் நுகர் பொருள்களையும் மூல முதலிலிருந்து தோற்றுவித்து அருளினான். இறைவனையும் ஆன்மாக்களையும் போல பாசமும் என்றும் உள்ள பொருளேயாகும்.

''உள்ளது அழியாது. இல்லாதது தோன்றாது''—அதாவது உற்பத்திக்கு முன்னரும் காரியப் பொருள், காரணப் பொருளில் உள்ளது என்பதாகும். இதுதான் நமது சைவசமயத்தின் அடிப்படையான உண்மை. எந் நாட்டவரும் இறைவன் என்று வணங்கும் 'செம்பொருளை' சிவம் என்று கூறுகின்றது சைவம். சிவம் மூவர்க்கும் தேவர்க்கும் மேலான பொருளாக விளங்குவதுபோல, சைவம் எல்லா இறைநெறிகளுக்கும் தாயகமாகவும் நாயகமாகவும் விளங்குகின்றது.

முழுமுதற் கடவுளாகிய சிவன் ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதியே தம்மிற் பிரிவில்லாத சக்தியைக்கொண்டு ஐந்தொழில்களையும் செய்கின்றார். மேலும் சடப்பொருளையோ, சக்திப் பொருளையோ, ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது என்பது அறிவியற் கோட்பாடு. ஒன்றில் ஒன்று ஒன்றினாலன்றிச் செயற்பாடு நடைபெறாது என்பதும் வெளிப்படையானது. எனவே ''சிவமின்றிச் சக்தியில்லை; சக்தியின்றிச் சிவமில்லை'' என்பதே உண்மை.

மாதொரு பாகனாகவும், அம்மை அப்பனாகவும் சிவபெருமான் காட்சியளிப்பதைக்கண்டு தெளிக. இடது பாகம் சக்திக்குரிய பாதியாகக் கொண்டு தட்சணாமூர்த்தி வடிவத்தில் சிவன் கல்லால மரநிழலில் வீற்றிருப்பதைக் காணலாம்.

இதயத்தின் கூடிய பகுதி உடலின் இடது பாகத்தையே சார்ந்து நிற்கிறது. அன்றியும் இதயத்தின் இடது பக்கமே உயிரோட்டமுடைய செங்குருதியைக் கொண்டது சக்தியை உடலெங்கும் பரப்புவதும் இடது பக்கமேயாகும்.

வலது பக்கத்தில் உள்ள பகுதியிலுள்ள அசுத்த இரத்தத்தைச் சுத்தமாக்கி அது இடது பக்கத்திற்கு எடுத்து வரப்படுகிறது. இது உயிர்ப்பைத் தரும் உயிர்ப்பு வாயுவால் செய்யப்படுகிறது.

அறிவு பூர்வமாகவும் அறிவியல் ரீதியாகவும் சக்தியின் தோற்றப்பாடும் அதன் வெவ்வேறு இயக்க வடிவங்களும் ஆழ்ந்து அகன்று விரிந்துள்ளன. இதற்கென ஒரு வடிவமும் அமைப்பும், அந்த அமைப்பின் பிரதி அமைப்புக்களும் சொல்லுக்கு அடங்காதவை.

எனினும் இறைவன் மாதொருபாகனாகவே காட்சியளிப்பான். இருவரையும் ஒருவராக வணங்குவதே தமிழ் வழக்கு. ''அம்மை நீ அப்பன் நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீ'' என்று சைவ அடியார்கள் பாடினர்.

### ஞானக்கதிர்

சிவனையும் சக்தியையும் பிரித்து வழிபடுவது ஆரிய வழக்காகும்; தமிழ் வழக்கில் சிவனுக்கு உள்ள அன்பு, அறிவு, ஆற்றல் என்ற சக்திகளை ஆரிய வழக்கில் இலக்குமி, சரஸ்வதி, துர்க்கை என்னும் மூன்று வடிவங்களாக அமைத்து வழிபட்டனர். இரண்டு வழக்குகளும் இணைந்த வழிபாட்டு முறையே தற்போதைய வழக்காக வந்துவிட்டது.

எனவே —

''சக்தி சக்தி என்று சொல்லி - அவள் சந்நிதியிலே தொழுது நிற்போம்''

அதன்மூலம், துன்பமில்லாத நிலையையும் தூக்கமில்லாத விழிப்பையும், அன்பு கனிந்த கனிவையும், ஆண்மை நிறைந்த துணிவையும், இன்பம் முதிர்ந்த இயல்பையும், ஊழ்வினை நீக்கும் உயர்வையும், உள்ளத்து ஒளிரும் உண்மையையும் உறுதியாகப் பெறுவோமாக.

- நா. க. சண்முகநாதபிள்ளை

### நாளை

**கார்த்திகை 22**

சனிக்கிழமை

**திதி:** துவாதசி

பின்இரவு 1.37 வரை.

**நட்சத்திரம்:** சித்திரை

முற்பகல் 8.18 வரை.

மரணயோகம்

**ராகுகாலம்:** 9.17 - 10.47

சுபநேரம்: [illegible] - 4.47

([illegible]

பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

### பாதுகாப்புக் காவலர்கள்

முன் அனுபவம் உள்ளவர்கள் நாளை (7-12-96) காலை 9மணி முதல் 12மணி வரை தராதரப் பத்திரங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

**அருண்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



## EDDISON
### ACADEMY

411/1, K.K.S. Road, Jaffna.

**ஆண்டு 6 முதல் O/L வரையிலான வகுப்புகள் ஆரம்பமாகின்றன.**

★ கணிதம் — திரு. T. தயாளன், திரு. S. ஈசன்
★ விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல், திரு. N. செல்வா
★ சமூகக் கல்வியும் வரலாறும் — திரு. K. கோபி, திரு. A. இராஜேந்திரன்
★ தமிழ் — திரு. S. கதிர்காமத்தம்பி, பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை
★ வர்த்தகமும் கணக்கியலும் — திரு. T. அரவிந்தன்
★ ஆங்கிலம் — திரு. K. சுப்பிரமணியம், திரு. T. சகாதேவன், திரு. V. அரசநாயகம்
★ ஆங்கில இலக்கியம் — திரு. K. சுப்பிரமணியம்

**97 ஆம் ஆண்டிற்கான புதிய வகுப்புகள் யாவும் இன்று (6-12-96)பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகின்றன.**

குறிப்பு: சகல பாடங்களிலும் மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும். (43981)



## யாழ். பல்கலைக்கழக (வெளிவாரி) விரிவுரைகள்

G. A. Q. , B. A. PART I , PART II
FIRST IN COM. , B. COM. PART I
PART II
PART III

விரிவுரைகள் **01-12-1996** இல் ஆரம்பமாகி விட்டன.

## பட்டப்படிப்புகள் கல்லூரி

73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
(43988)


## ஆசிரியரைக் காணவில்லை

வயாவிளான், ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலய ஆசிரியரும், உரும்பிராயைச் சேர்ந்தவருமான

### திரு. செ. குணரத்தினம்

பாடசாலை அலுவலாக உடுவிலிலுள்ள தெல்லிப்பழைக் கல்விக்கோட்டத்திற்கென 2-12-96 திங்கட்கிழமை காலை 9–00 மணிக்குச் சென்றபோது காணாமற் போயுள்ளார். தகவல் அறிந்தவர்கள் உடன் அறியத் தரவும்.

செ. பிரேமாதேவி
[மனைவி]

பஞ்சன் வீதி,
உரும்பிராய் மேற்கு.
[43979]

## மரண அறிவித்தல்

### தா. சி. வல்லிபுரம்

**(சுகாதாரப் பரிசோதகர், நகரசபை, பருத்தித்துறை.)**

தா. சி. வல்லிபுரம் (சுகாதாரப் பரிசோதகர்) (1-12-1996) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அவரின் மரணச் சடங்குகள் அன்றைய தினம் பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி. வ. பத்தினிப்பிள்ளை
(மனைவி)

தாமரைக் குளத்தடி,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.
(43983)

**மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்**

யாழ். வாசிகளுக்கு போலி விஸா:

# சார்ஜண்ட் உட்பட 7பொலீஸார் ஊழல் மோசடியில் கைதாகினர்!

கொழும்பு, டிச. 6

கொழும்பு விடுதிகளில் தங்கியுள்ள யாழ். வாசிகளுக்கு போலி விஸா தயாரித்து வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் புலனாய்வுப் பிரிவு சார்ஜண்ட் ஒருவரும், ஆறு பொலீஸாரும் கொழும்பு கொம்பனித் தெரு பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக மேலும் பலர் தேடப்பட்டு வருகின்றனர்.

போலி விஸாவை வழங்கி வெளிநாடு செல்லும் தமிழர்களை விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லும் பணியில் இந்த சார்ஜண்ட் ஈடுபட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஜி.சீ.ஈ. பரீட்சை மாணவருக்கு மண் எண்ணெய்

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ் பிரதேச செயலர் பிரிவில் ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தலா 3லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்பட விருப்பதாக யாழ். பிரதேச செயலர் க. குணராசா தெரிவித்தார்.

இத்தகைய மாணவர்கள் தமது குடும்ப அட்டையையும், பரீட்சையில் தோற்றுவதை உறுதி செய்யும் கல்லூரி அதிபரின் கடிதத்தையும் பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்தும்—

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது பிரிவு கிராம உத்தியோகத்தரின் உறுதிப் படுத்திய கடிதத்தைச் சமர்ப்பித்தும் — மண் எண்ணெய்க்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஜெனரேட்டர்கள் கிடைத்தன

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 56 கே.வி. வலுவுள்ள இரு ஜெனரேட்டர்கள் இன்று வந்து சேரவிருக்கின்றன.

கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ள இந்த ஜெனரேட்டர்கள் இன்று பல்கலைக்கழகத்தில் பொருத்தப்படவிருக்கின்றன.

இவை பொருத்தப்பட்டதும் பல்கலைக்கழகத்தில் நிலவிய மின்சாரத் தட்டுப்பாடு நீங்கும் எனத்தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானகபெரேராவின் உதவியுடன் இந்த ஜெனரேட்டர்களை கொழும்பில் இருந்து எடுத்து வந்துள்ளார். (இ-3)

## இரண்டு வருடங்களாகத் தூங்கும் அதி நவீன எக்ஸ்ரே இயந்திரம்

### பொருத்த ஆள் வரவேண்டுமாம்!!

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் சேவைக்கென, ஜேர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட, முற்றிலும் நவீன முலறயிலான பாரிய எக்ஸ்றே இயந்திரம் ஒன்று வந்தபடியே கடந்த இரண்டு வருடமாகக் கிடக்கிறது.

வரும்போது இருந்த மாதிரி பகுதி பகுதியாகப் பெட்டிகளில் அடைக்கப்பட்ட நிலையிலேயே இந்த இயந்திரம் இன்னும் இருந்து வருகிறது.

ஆஸ்பத்திரி இயக்குநர் குழுவினால் இரண்டு வருடங்களுக்கு முன், ஜேர்மனியில் இருந்து இந்த இயந்திரம் இறக்குமதி செய்யப்பட்டது.

இயந்திரத்தை முழுமையாகப் பொருத்துவதற்கு ஜேர்மனியில் இருந்தே பொறியியலாளர் வரவேண்டும்.

அவர் வரவை எதிர்பார்த்து ஒருவருடம் கழிந்தது.

இதன் பின்னர் தொடர்ந்து இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் மேலும் காலதாமதம் ஏற்பட்டது.

தற்போது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில் இயந்திரம் அப்படியே விடப்பட்டுள்ளது.

மேலும் இந்தப்பாரிய இயந்திரத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் பொருத்துவதற்கு ஏற்ற கட்டட அமைப்பும் இல்லை எனவும் —

இதனை இயங்கவைப்பதற்கான மின்சார வசதிகளும் தற்போதைக்கு இல்லை எனவும் எக்ஸ்றே வட்டாரத்தில் இருந்து அறியமுடிந்தது. (இ-15)

## கோப்பாய் பகுதி விசேட அ. அட்டை

யாழ்ப்பாணம், டிச. 6

வலிகிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கோப்பாய் வடக்கு, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் கிழக்கு, ஊரெழு, நீர்வேலி தெற்கு, நீர்வேலி மேற்கு, நீர்வேலிவடக்கு, சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் கிழக்கு, அச்செழு, வாதரவத்தை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் வழங்கப்படவுள்ளன என்று கோப்பாய்ப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

## தபாலதிபர் வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள தபாலதிபர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்பட உள்ளன.

தபால் அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தின் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ்.செயலக வேலை வங்கியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 128 பேருக்கு நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் பதிவுத் தபால் மூலம் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மொத்தம் 20 தபாலதிபர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

### மீளக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பனவு பெறத் தகுதியுடையோர் வங்கிக்கணக்கு ஒன்றை எந்த வங்கியிலாவது வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சேமிப்புக் கணக்கு வைத்திருப்போருக்கு மட்டுமே கொடுப்பனவு செய்ய முடியும் என்றும் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்குமாறும் சில கிராமசேவகர்கள் மக்களை வலியுறுத்துகின்றனர். ஆனால் வங்கி ஒன்றில் கணக்கு வைத்திருந்தால் போதுமானது. சேமிப்புக் கணக்குத்தான் தேவை என்பதில்லை என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சங்கானை, வலி – வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இக்கொடுப்பனவு வழங்கும்பணி ஆரம்பிக் கப்பட்டுள்ளது. (இ- 3- 5)

### சூறாவளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீசலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சூறாவளி வலுவிழந்ததால் ஏற்கனவே இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

## குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தம்

### இலங்கையுடன் செய்ய கோரிக்கை

புதுடில்லி, டிச. 6

''முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வந்து விசாரிக்க ஏதுவாகக் குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தத்தை இலங்கையுடன் இந்தியா செய்து கொள்ள வேண்டும்''

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று அமைச்சர்கள் பலரும் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினையை முதலில் எடுத்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி ஜெயந்தி நடராஜன் புலிகள் அமைப்பு மீதான தடையை எக்காரணம் கொண்டும் இந்தியா விலக்கிக் கொள்ளக் கூடாது என்று சொன்னார்.

புலிகளுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பும் அமைப்புக்கள் மீது மத்திய அரசும் தமிழக அரசும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அந்த நாட்டு அரசுக்கு இந்தியா உதவ வேண்டுமென்று பீற்றர் அல்போன்ஸ் தெரிவித்தார். (இ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org